செ. கு. எண்: 008 நாள் :06.01.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 6.1.2014

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் வட்டம், தூனேரி கிராமம், சோலாடா என்ற பகுதியைச் சேர்ந்த திரு. ரவி என்பவரின் மனைவி கவிதா 4.1.2014 அன்று தொட்டப்பெட்டா வனப் பகுதி அருகே சிறுத்தைப் புலியால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

சிறுத்தைப் புலி தாக்கியதில் அகால மரணமடைந்த கவிதாவின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த கவிதாவின் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9